https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வண்ணச் சினைச் சொல்

**முனைவர் த. வசந்தாள்**
தமிழ்ப் பேராசிரியர்

*அடை சினை முதல் என முறை மூன்றும் மயங்காமை*
*நடை பெற்று இயலும் வண்ணச் சினைச் சொல் (தொல்.சொல்.1:26)*
*அடை சினை முதன்முறை அடைதலும் ஈரடை*
*முதலோடு ஆகலும் வழக்கியல் ஈரடை*
*சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே* (நன்னூல்.403)

என வண்ணச் சினைச் சொல்லுக்குத் தொல்காப்பியரும் பவணந்தியாரும் இலக்கணம் வகுத்துள்ளனர். அவை அச் சொல் வரும் முறைமையை விவரிக்கின்றன.

காட்டு:

**அம் சிறைத் தும்பி (2:1)**

பண்புச் சொல் + சினைச் சொல் + முதற் சொல்
அம் + சிறை (இறகு) + தும்பி

**பொங்கு மயிர்க் கலை (90:3-4)**

பண்புச் சொல் + சினைச் சொல் + முதற் சொல்
பொங்கு + மயிர் + கலை

**உரல் கால் யானை (232:4)**

பண்புச் சொல் + சினைச் சொல் + முதற் சொல்
உரல் + கால் + யானை

- பண்புச் சொல், சினைச் சொல், முதற் சொல் ஆகிய மூன்றும் சொல்லப்பட்ட முறை மயங்காமல் வழக்கைப் பொருந்தி வரும் என்பது இலக்கணம்.
- வண்ணம், வடிவம், அளவு, சுவை போன்று ஏதேனும் ஒரு பண்பு தொக்கி நிற்கும் ஒரு பெயர்ச் சொல் / பெயர்ச் சொல்லில் ஒரு வகை.
- பண்புத் தொகையில் ‘மை’ எனும் விகுதியும், ‘ஆகிய’ என்னும் உருபும் மறைந்திருக்கும்.
- ‘வடிவு முதலாகிய பிற பண்பும் உளவேனும் வண்ணப் பண்பினது வழக்குப்பயிற்சி நோக்கி வண்ணச் சினைச் சொல்’ என்பர் உரைகாரர்.
- சினையொடு குணம் இரண்டடுக்கல் செய்யுள் ஆறு. முதலொடு குணம் இரண்டடுக்கல் வழக்கிற்கு உரித்து என்பது இளம்பூரணம்.

குறுந்தொகைப் பாடல்களில் உள்ள வண்ணச் சினைச் சொல் தொகுக்கப் பட்டன. எல்லாச் சொல்லும் உள்ளன என்பது முடிந்த முடிவு அல்ல விடுபட்ட வையும் இருக்கும். அவற்றை நீங்கள் அறிந்தால் சேர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் வண்ணச் சினைச் சொல் பற்றி இலக்கண உரை ஆசிரியர்கள் இடையே கருத்து வேறுபாடு உண்டு. இளம்பூரணர், தெய்வச் சிலையார், சேனாவரையார் ஆகியோர் உரைகளைப் படித்து அறிந்து கொள்ளுங்கள். எனினும் குறுந்தொகையில் கிடைத்த வண்ண சினைச் சொற்கள் தொல்காப்பியர் காட்டிய கருப்பொருள் வழி நின்று வகை தொகை செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

**மக்கள்**

அணி முலை ஆகம் *(274:8)*

குறி இறைப் புதல்வர் *(394:3)*

பெருந்தோள் கொடிச்சி *(335:7)*

முது வாய் வேல *(362:1)*

வன் கண் ஆடவர் *(274:4)*

வெண் தலைச் சிதவலர் *(146:3)*

வெவ் வாய்ப் பெண்டிர் *(373:3)*

**உணவு**

பெருங் குரல் ஏனல் *(360:5)*

**விலங்கு**

அம் செவிக் குழவி (மான் கன்று) *(322:1)*

இலங்கு மருப்பு யானை *(215:4)*

உயர் கோட்டு ஒருத்தல் *(396:4)*

உரல் கால் யானை *(232:4)*

ஏந்து கோட்டு யானை *(258:4)*

கடுங் கண் யானை *(331:4)*

கடுங் கண் வேழம் *(100:5)*

கடும் பல் ஊகம் *(373:5)*

கயந் தலைக் குழவி *(394:1)*

கறை விரல் ஏறு *(373:5)*

செங் கோட்டு யானை *(1:2)*

தடக்கை யானை *(332:4)*

திரி மருப்பு இரலை *(361:1)*

பைங் கண் யானை *(333:2)*

பொங்கு மயிர்க் கலை *(90:3-4)*

பொன் வரி அலவன் *(303:7)*

மடக் கண் வரை ஆ *(363:4)*

வரிப் புற நீர் நாய் *(364:1)*

வீங்கு முலைச் செருத்தல் *(344:4)*

வெண் கோட்டு யானை *(75:3)*

**மலர்**

அலர் வேர்க் கண்டல் *(340:4)*

சுனைப் பூங் குவளை *(346:4)*

நிரை இதழ்க் குவளை *(388:1)*

பசு நனைக் குரவம் *(341:1)*

பேர் இலைப் பகன்றை *(330:4)*

பொரிப் பூம் புன்கு *(341:2)*

வண்ணத் துய்ம் மலர் *(110:6,373:6)*

வள் இதழ் நீலம் *(366:5)*

வாடு பூஞ் சினை *(343:6)*

பைங் கொடி முல்லை *(382:1)*

**மாலை**

துணை மலர்ப் பிணையல் *(229:6)*

**[பிணையல் – மாலை]**

மயங்கு மலர்க் கோதை *(339:4,393:1)*

**பழம்**

கமழ் சுளைப் பெரும் பழம் *(304:1)*

**மரம்**

அகல் இலைப் பலவு *(352:3)*

இன் இணர்ப் புன்னை *(303:6)*

கருங் கால் வேங்கை *(343:5)*

கருங் கோட்டுப் புன்னை *(123:3)*

சிறு வீ ஞாழல் *(249:1)*

சிறு வீ முல்லை (கொம்பு) *(348:3)*

நெடு மடல் குருத்து *(372:1)*

புல் அரை உகாஅய் *(363:4)*

புன் கால் உகாஅ *(274:1)*

பைங் கால் மா *(331:6)*

பொரிப் பூம் புன்கு *(341:2)*

முடச் சினை வெட்சி *(209:5)*

விரி அலர்ப் புன்னை *(332:5-6)*

வெண் கோட்டு அதவம் *(24:3)*

**கிளை**

வாடு பூஞ் சினை *(343:6)*

**கட்டில்**

குறுங் காற் கட்டில் *(359:3)*

**வாளி**

*வை வார் வாளி (297:2)* **[வாளி – அம்பு]**

**சேக்கை**

*நறும் பூஞ் சேக்கை (359:3)*

**[சேக்கை – படுக்கை]**

**கொடி**

*அரில் பவர்ப் பிரம்பு (364:1)*

*கவட்டு இலை அடும்பு (243:1)*

**புல்**

*செங் காற் பதவு (363:2)*

**[பதவு – அறுகம் புல்]**

*மாக் கொடி அறுகை (256:1)*

**பறவை**

*அஞ் சிறைத் தும்பி (2:1)*

*அம் சிறை நாரை (296:2)*

*கருங் கால் அன்றில் (301:3)*

*குறுங் கால் அன்னம் (300:6,304:5)*

*குறுஞ் சிறைத் தும்பி (239:4)*

*கூர் உகிர்ப் பறவை (352:2)*

*கொடு வாய்ப் பெடை(160:2)*

*கொடுஞ் சிறைப் பறவை (92:2)*

*சிறு வெண் காக்கை (246:1)*

*செந் தலை அன்றில் (160:1)*

*தடந் தாள் நாரை (349:2)*

*நெடுங் காற் கணந்துள் (350:5)*

*நொப்பறை வாவல் (172:1)*

*புன் புறப் பெடை (285:5)*

*பைங் கால் கொக்கு (122:1)*

*போழ் கண் மஞ்ஞை (391:7)*

*மணிச் சிறைத் தும்பி (392:1)*

**கூடு**

*சிறு கோற் குடம்பை (301:2)*

**அம்பு**

*செங்கோல் வாளி (272:6)*

- ⇒ *பெருந் தோள் குறுமகள்(280:3), சிறு கண் பெரு நிரை(255:4), சிறு கண் பெருங் களிறு(88:2), சிறு கோட்டுப் பெரும் பழம் (18:4), என்பன போன்ற சொற்கள் வண்ணச் சினைச் சொற்களின், ஆக்கம் அல்லது விரிவு அல்லது பெருக்கம் என்று எடுத்துக் கொள்ளலாமா? என்பதை இலக்கண அறிஞர்கள் தான் சொல்ல வேண்டும்.*
- ⇒ *அடைச் சொல், சினைச் சொல், முதற் சொல் ஆகிய மூன்றும் அடுக்கி வரும் வண்ணச் சினைச் சொல் அகப்பாடல்களுக்கு அழகு சேர்க்கின்றது.*
- ⇒ *கடுங்கண் யானையும் பைங் கண் யானையும் ஏந்து கோட்டு யானையும் செங் கோட்டு யானையும் உரல் கால் யானையும் கடுங் கண் வேழமும் கவிதைக்குள் உலா வருகின்றன. அவை தொல் தமிழனின் வாழ்விடங்களில் இருந்த யானையின் பெருக்கத்தைச் சொல்லுகின்றன.*
- ⇒ *யானை மட்டும் அல்ல திரி மருப்பு இரலையும் பொங்கு மயிர் கலையும் சுற்றித் திரிகின்றன;*
- ⇒ *அம் சிறைத் தும்பியும் குறுஞ் சிறைத் தும்பியும் தடம் தாள் நாரையும் பைங் கால் கொக்கும் தலை மக்களின் வாழ்வைக் குறித்துச் சொல்லுவதற்கு அகப் பாடல்களுள் பறந்து திரிகின்றன;*
- ⇒ *கருங் கோட்டுப் புன்னை தலைமக்களின் குறியிடம்.*
- ⇒ *தலைமக்களின் வாழ்வைக் காட்டும் அகப் பாடல்கள் பறவையின் கூட்டைச் சொல்லவும் மறக்கவில்லை.* **சிறு கோல் குடம்பை** என்பது பறவையின் கூடு, அக் கூடு சிறிய குச்சிகளை வைத்துக் கட்டிய கூடு என்பதை விவரிக்கின்ற அழகிய 'வண்ணச் சினைச் சொல்' ஆகும். *மொத்ததில் குறுந்தொகைப் பாடல்கள் காட்டும் வண்ணச் சினைச் சொற்கள் கவிதைக்குக் கவின் சேர்க்கின்றன.*

******

***[குறுந்தொகை சாந்தி சாதனாப் பதிப்பின் வழி வண்ணச் சினைச் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன].***